DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC. No. 74/2019
Prosecution witness – PW.7

| | | |
|---|---|---|
| Name | :திரு. தர்மராஜ் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)
28.02.2024 – 01.10 PM
சாட்சியை நிலைய முதல் நிலைக்காவலர்–2148 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை

1. எனக்கு சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் மறைக்குளம் கிராமம். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். அவர் வட்டாட்சியராக இருந்து வந்தார். அவர் தான் எங்களை மீட்டவர். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர்தான் நாங்கள் கல் அருக்கும் வேலை செய்த அச்சங்குளத்தில் உள்ள சுகன்யா சேம்பரின் உரிமையாளர்.

2. எங்கள் ஊரில் கடந்த 2012ம் ஆண்டு செங்கல் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். உலக்குடியைச் சேர்ந்த ஒரு நபர் மூலம் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் கணவன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வேலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஊரில் பஞ்சமாக இருந்ததால் வேலை இல்லை.

3. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தோம். தங்குவதற்கு சேம்பரில் ஓலைக்குடிசை அமைத்துக் கொடுத்தார்கள். நாங்கள் சம்பளத்தில் காய்கறி வாங்கிச் சமைத்து சாப்பிட்டு வந்தோம். வாரம் ஒரு முறை சம்பளம் தருவார்கள்.

4. வாரத்திற்கு ரூ.5000/–வரை சம்பளத்திற்கு வேலை செய்தால் அதில் மூன்றில் 2 பங்கை பிடித்துக்கொண்டு 1 பங்கை எங்களுக்கு கொடுப்பார்கள். மீதி பணத்தை அட்வான்ஸ் தொகையில் கழித்துவிடுவார்கள்.

5. எனக்கும் எனது மனைவிக்கும் சேர்த்து ரூ.40,000/–அட்வான்ஸ் தொகையாகக் கொடுத்தார்கள். நாங்கள் தினமும் அதிகாலை 04.00 மணியிலிருந்து மாலை 07.00 மணி வரை வேலை செய்வோம். ஊரில் நல்லது கெட்டது எதுவும் நடந்தால் மனைவி மட்டுமே செல்ல அனுமதித்தார்கள். நாங்கள் செல்லமுடியாது. இந்த

விபரங்கள் அனைத்தும் உரிமையாளருக்குத் தெரியும். தினமும் காலையிலும், மாலையும் சேம்பருக்கு வருவார். நாங்கள் வேலை செய்வதை பார்ப்பார்.

6. பின்னர் ஒரு நாள் எங்களை மிரட்டி கார்த்திக் என்பவரை உரிமையாளரான ஆஜர் எதிரி கம்பால் அடித்தார். சேம்பருக்குள் கோடு போட்டு வைத்து வந்தால் உங்களுக்கும் அடி விழும் என்று மிரட்டுவார். பின்னர் அபிராமம் மற்றும் திருச்சுழி வட்டாட்சியர் மற்றும் அபிராமம் போலீசார் வந்து எங்களை மீட்டு திருச்சுழிக்கு அழைத்துச் சென்றார்கள்.

7. மறுநாள் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரிலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. சாட்சிகளின் விசாரணையை ஒத்திவைக்க மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது)

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.